O.S. 29/2018

சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்:16.11.2024

PW2:காட்டுராஜ் த/பெ– கருப்பு

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

எனக்கு சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் வாதி என் மனைவி என்பதால் வழக்கு விபரம் எனக்கு தெரியும். நான் நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள முகவரியில் பூர்வீகமாக வசித்து வருகிறேன். எங்கள் திருமணத்திற்கு பின்னர் தான் தாவா சொத்து பற்றி எனக்கு தெரியவந்தது என்றால் சரிதான். அதனால் 1ம் பிரதிவாதி தாவா சொத்தை சுய கிரையம் பெற்றாரா, கூட்டுக்குடும்ப வருமானத்தில் இருந்து கிரையம் பெற்றாரா என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல, கூட்டுக்குடும்ப வருமானத்தில் இருந்து கிரையம் வாங்கினார். அந்த கூட்டுக்குடும்பத்தில் என் மாமனார் மற்றும் அவரது வாரிசுகள் வருமானத்தில் இருந்து வாங்கப்பட்டது. தாவா 1ம் அயிட்ட சொத்து 1967 கிரையம் பெறப்பட்டது. எனது மனைவி 1973ல் பிறந்தார். 1973ல் பிறந்தவர் 1967ல் வாங்கப்பட்ட சொத்திற்கு என் மனைவி எந்த வகையில் உழைத்தார் என்றால் என் மனைவிக்கு விபரம் தெரிந்தது முதல் அந்த வீட்டிற்காக வீட்டிலும், வயலிலும் பல்வேறு வேலை செய்தார். 1ம் லக்க சொத்து என் மாமனாரின் பூர்வீக சொத்தின் வருமானத்தில் இருந்து வாங்கப்பட்டது. தபசில் 2ம் அயிட்ட சொத்து 1978ல் கிரையம் பெறப்பட்டது. தபசில் 2ம் அயிட்டசொத்து என் மனைவி பிறந்து 5 வருடம் கழித்து வாங்கப்பட்ட சொத்து. 5 வயதில் என் மனைவிக்கு வேலைக்கு சென்றிருக்க முடியாது என்றும், அதனால் அந்தகிரையத்தில் என்

மனைவிக்கு எந்த பங்கும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. திருமணமானதில் இருந்து எனது ஊரில் தான் வசித்து வருகிறோம் என்று சொன்னால் சரிதான், அவ்வப்போது என் மனைவியின் ஊருக்கும் சென்று மேற்படி சொத்துக்களில் எங்கள் உழைப்பை செலுத்தினோம். 1ம் பிரதிவாதி 2016ல் இருந்து சுய நினைவை இழந்தார். 2016க்கு முன்பு 1ம் பிரதிவாதி நல்ல நிலையில் இருந்தாரா என்றால் அவர் வயோதிகத்தின் காரணமாக பாதிக்கப்பட்டிருந்தார். 1ம் பிரதிவாதி கிணற்றில் இறங்கும் போது தவறி விழுந்தார். அதன் காரணமாகவும், அவருக்கு ஏற்கனவே இருந்த வயோதிக பிரச்சனை காரணமாகவும் சுயநினைவை இழந்தார். 1ம் பிரதிவாதி 2019ம் இறந்தார்.1ம் பிரதிவாதி 4 வருடமாக சுயநினைவில்லாமல் இருந்தாரா என்றால் சுயநினைவில்லாமல் தனக்கு தானே பேசிக்கொண்டிருந்தார். 1ம் பிரதிவாதி அவரது இறுதிகாலம் வரை தனியாக தான் வசித்து வந்தார் என்றால் அவரை பராமரிக்க ஒரு நபர் சம்பளத்திற்கு இருந்தார், நாங்களும் வாரம் ஒருமுறை சென்று வருவோம். 1ம் பிரதிவாதிக்கு விருதுநகா் திருவேங்கடம் மருத்துமனையிலும், மதுரை மீனாட்சி மிசன் மருத்துவமனையிலும் சிகிச்சை அளித்தோம். 1ம் பிரதிவாதியின் மருத்துவ செலவுகளை நாங்கள் தான் செய்தோமா என்றால் அவரது வங்கி பணத்தை எடுத்து பொதுவாக செலவு செய்து வந்தோம். 1ம் பிரதிவாதி ராம்கோ சிமிண்ட் பேக்டரியில் உள்ள வங்கியில் கணக்கில் இருந்தது. 1ம் பிரதிவாதியின் பணத்தை எடுக்க வங்கியில் அனுமதி பெற்றோமா என்றால் அவரது இளைய மகன் அவரது வங்கி கணக்கு புத்தகத்தை கைப்பற்றி அவர் வந்த போது வங்கியில் பணத்தை எடுத்து வந்தார். பணம் எடுக்க அனுமதி கடிதம் கொடுத்தோமா என்றால் அதை எடுத்தவரை விசாரித்தால் தான் தெரியும். அந்த நபரை விசாரித்தால் தான் 1ம் பிரதிவாதி சுயநினைவில் இருந்தாரா இல்லையா என்று தெரியும் என்றால் சரிதான்,

மருத்துக்குறிப்பேடுகளை பார்த்தாலும் தெரியும். விருதுநகர் திருவேங்கடம் மருத்துமனையிலும், மதுரை மீனாட்சி மிசன் மருத்துவமனையிலும் நான் தான் 1ம் பிரதிவாதியை வைத்து சிகிச்சை அளித்தேன் என்று சொன்னால் அந்த மருத்துவக்குறிப்பேடுகள் என் வசம் தான் உள்ளது என்று சொன்னால் மீனாட்சி மிசனில் நான் தனிப்பட்ட முறையில் வைத்து வைத்தியம் பார்க்கவில்லை, கூட்டாக பார்த்தோம். தபசில் சொத்தை என் மனைவி பங்களிப்பில் வாங்கப்பட்டதா அல்லது 1ம் பிரதிவாதியின் வருமானத்தில் வாங்கப்பட்டதா என்று என் மனைவி சொல்லி தான் தெரியும் என்றால் என் மனைவியும், மாமனாரும் சொல்லி தெரியும். 2016ல் தான செட்டில்மெண்ட் எழுதிய விபரம் எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் எனக்கு ஞாபகமில்லை, 1 வருடத்திற்கு பின்பு தெரியும். தானசெட்டில்மெண்ட் சம்மந்தமாக புகார் கொடுத்தோமா என்றால் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடமும், மாவட்ட ஆட்சியரிடமும் மனு கொடுத்தோம். நான் புகார் கொடுத்த சமயம் 1ம் பிரதிவாதி விருதுநகரில் இருந்தார். மேற்படி புகார் எனது மனைவி பெயரில் கொடுக்கப்பட்டது. புகார் விசாரணைக்கு 1ம் பிரதிவாதி ஆஜராகவில்லை. என் மனைவி புகார் கொடுத்த விபரம் 1ம் பிரதிவாதிக்கு தெரியுமா என்றால் கேள்விப்பட்டுள்ளார். ஏன் புகார் கொடுத்தீர்கள் என்று என் மனைவியிடம் கேட்டாரா என்றால் குடும்பத்துடன் அவரை பார்க்க வந்த போது சரிப்பா உங்கள் சொத்தை உங்கள் உரிமை கோரி வாங்கி கொள்ளுங்கள் என்று சொன்னார். 1ம் பிரதிவாதி சொன்னதின் பேரில் தான் எனது மனைவி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியை சுயநினைவில்லாதவர் என்று சொல்லிவிட்டு, 1ம் பிரதிவாதி எனது மனைவியிடம் சொன்னதின் பேரில் வழக்கு தாக்கல் செய்துள்ளதாக சொல்லியுள்ளது சரியல்ல என்று சொன்னால் அவர் ஆரம்பத்தில் இருந்தே சொத்தில் அனைவருக்கும்

சொத்து உள்ளது என்று சொன்னார். என் மனைவிக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(5 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை -**இல்லை.)**